**செப்டம்பர் – 23**

# TNPSC துளிகள்

- புது டெல்லியின் ஜன்பத் பகுதியில் உள்ள இந்திய தேசிய ஆவணக் காப்பகம் (NAI), மற்றும் தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி அமைப்பு ஆகியவற்றினால் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய ஆவணக் காப்பகக் குழுவின் (NCA) இரண்டு நாட்கள் அளவிலான 50வது பொன்விழா கூட்டம் சென்னையில் நடைபெற்றது.
- ஒளிப்படக் கருவிகள், ஒலிப்பெருக்கிகள் மற்றும் ஒலி வாங்கிகளுடன் கூடிய மிகை மெய்த் தோற்றங்களுக்கான உள்ளமைக்கப்பட்ட புலன் கோட்டிற்கு நேராக அமைக்கப் பட்ட திரைகள் கொண்ட முதல் ரே-பான் ஸ்மார்ட் கண்ணாடிகளை மெட்டா நிறுவனம் அறிவித்துள்ளது.
- துபாயில் நடைபெற்ற 28வது UPU காங்கிரஸின் போது, உலகளாவிய அஞ்சல் ஒன்றியத்தின் (UPU) நிர்வாக சபை (CA) மற்றும் தபால் செயல்பாட்டுச் சபை (POC) ஆகியவற்றிற்கு இந்தியா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- பீகாரைச் சேர்ந்த மரியம் பாத்திமா, மாநிலத்தின் முதல் பெண் FIDE மாஸ்டர் (WFM) ஆனதன் மூலம் குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளார்.
- சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) நிர்வாக இயக்குனர் கிறிஸ்டலினா ஜார்ஜீவா, அமெரிக்காவைச் சேர்ந்த டேனியல் காட்ஸை சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் நிலை தலைமைப் பதவியாக பரவலாகக் கருதப்படுகின்ற அதன் முதல் துணை நிர்வாக இயக்குநராக நியமிக்க முன்மொழிந்தார்.

# தேசியச் செய்திகள்

## சாத் திருவிழா 2025




- மத்தியக் கலாச்சார அமைச்சகமானது, சாத் திருவிழாவிற்கு யுனெஸ்கோ அங்கீகாரம் பெறுவதற்காக பன்னாட்டுப் பரிந்துரையைப் பெற முயற்சித்து வருகிறது.
- 2003 ஆம் ஆண்டு உடன்படிக்கையின் கீழ் மனிதகுலத்தின் மகத்தான கலாச்சார

பாரம்பரியத்தின் பிரதிநிதிப் பட்டியலில் சேர்ப்பதற்காக இந்த முன்மொழிதல் முன் வைக்கப் பட்டுள்ளது.

- சாத் திருவிழாவானது, சூரியக் கடவுள் மற்றும் தெய்வம் சாத்தி மையாவுக்கு அர்ப்பணிக்கப் படுகின்ற திருவிழாவாகும்.
- இந்தியாவின் பழமையான பண்டிகைகளில் ஒன்றான இது பீகார், ஜார்க்கண்ட், உத்தரப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்காளத்தில் மாபெரும் கொண்டாட்டங்களுடன் கொண்டாடப்படுகிறது.
- மொரிசியஸ், பிஜி, சுரினாம், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் நெதர்லாந்தில் உள்ள புலம்பெயர்ந்த சமூகங்களாலும் இந்த விழா கொண்டாடப்படுகிறது.
- இந்தியாவில் தற்போது 15 கூறுகள் யுனெஸ்கோ அமைப்பின் மனிதகுலத்தின் மகத்தான கலாச்சாரப் பாரம்பரியங்களின் பிரதிநிதி/மாதிரிப் பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ளன.

## ஆதி கர்மயோகி அபியான்




- பிரதமர் 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 ஆம் தேதியன்று ஆதி கர்மயோகி அபியான் திட்டத்தினை தொடங்கி வைத்தார்.
- இது மத்தியப் பிரதேசத்தின் தார் பகுதியிலிருந்து தொடங்கப்பட்ட உலகின் மிகப் பெரியப் பழங்குடியின அடிமட்ட தலைமைத்துவத் திட்டமாகும்.
- ஆதி கர்மயோகி அபியான் என்பது ஜன்ஜாதிய கௌரவ் வர்ஷ் திட்டத்தின் கீழ் பழங்குடியின விவகார அமைச்சகத்தினால் வழிநடத்தப்படும் ஒரு தேசிய அளவிலான திட்டமாகும்.
- இந்தத் திட்டமானது, 30 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள 1 லட்சம் கிராமங்களில் 11 கோடி பழங்குடியின குடிமக்களுக்குப் பயன்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தப் பிரச்சாரமானது, 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 முதல் அக்டோபர் 02 ஆம் தேதி வரையிலான ஆதி சேவா பர்வ் காலத்தில் நடத்தப்படுகிறது.
- இது சேவா (சேவை), சமர்ப்பன் (அர்ப்பணிப்பு) மற்றும் சங்கல்ப் (தீர்மானம்) மூலம் நடவடிக்கை எடுக்கக்கூடிய நிர்வாகத்தில் கவனம் செலுத்துகிறது.

- சுமார் 20 லட்சம் அதிகாரிகள், சுய உதவிக்குழு மகளிர் மற்றும் பழங்குடியின இளையோர்கள் ஆதி கர்மயோகிகளாக பயிற்சி பெற்றனர்.
- 1 லட்சம் கிராமங்கள் ஒவ்வொன்றும் 2030 ஆம் ஆண்டிற்கான தொலைநோக்கு திட்டங்கள் கொண்ட ஒரு பழங்குடியின கிராமத்திற்கான ஆவணத்தைத் தயாரிக்கும்.
- தார்தி ஆபா ஜன்ஜாதிய கிராம் உத்கர்ஷ் அபியான் 2.0 மற்றும் பிரதமர் ஜன்மான் போன்ற திட்டங்களுடன் இணைக்கப்பட்ட கிராம செயல் திட்டங்கள் உருவாக்கப் படும்.
- ஒவ்வொரு கிராமமும் ஒற்றைச் சாளர சேவை மையமாக ஓர் ஆதி சேவா கேந்திராவை நிறுவும்.
- குடியிருப்பாளர்கள் வாராந்திர அளவிலான ஆதி சேவா சமய் எனும் ஒரு மணி நேரத் தன்னார்வச் சேவைக்குப் பங்களிப்பார்கள்.
- இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழக நிறுவனங்கள், இந்திய மேலாண்மை கல்வி நிறுவனங்கள், அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனங்கள் மற்றும் மத்திய பல்கலைக் கழகங்களில் ஆதி கர்மயோகி மாணவர் பிரிவுகள் அமைக்கப்படும்.
- ஆதி கர்மயோகி சான்றிதழளிப்புத் திட்டம், தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் பழங்குடியினர் பகுதிகளில் பணியாற்ற இளம் நிபுணர்களை ஈடுபடுத்தும்.
- இந்தத் திட்டமானது துறைசார் வளங்களை ஒருங்கிணைப்பதையும் மேம்பாட்டில் சமூகக் கூட்டாண்மையையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டமானது, இந்தியா முழுவதும் 550 மாவட்டங்களிலும் 3000 தொகுதிகளிலும் பலனளிக்கிறது.

## ஸ்வஸ்த் நாரி சஷக்த் பரிவார் அபியான்

- ஸ்வஸ்த் நாரி சஷக்த் பரிவார் அபியான் (SNSPA) என்பது சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் (MoHFW) மற்றும் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் (MoWCD) ஆகியவற்றின் கூட்டு முன்னெடுப்பாகும்.
- பெண்கள் மற்றும் குழந்தைகளிடையே சுகாதார நிலைமைகளை முன்கூட்டியே கண்டறிந்து சிகிச்சையளிப்பதன் மூலம் பேறுகாலத் தாய்மார்கள் உயிரிழப்பைக் குறைப்பதை இந்தப் பிரச்சாரம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- SNSPA ஆனது, சிறப்பு மருத்துவச் சேவைகள் மற்றும் இலக்கு சார்ந்த ஆலோசனைகளை வழங்குவதன் மூலம், வசதி குறைந்த கிராமப்புற மற்றும் பழங்குடியினப் பகுதிகளில் சுகாதார அணுகலை மேம்படுத்துகிறது.
- இந்தப் பிரச்சாரத்தின் கீழ், இந்தியா முழுவதும் உள்ள ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திர்கள் மற்றும் சமூக சுகாதார மையங்களில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட சுகாதார முகாம்கள் நடத்தப்படும்.
- இரத்த சோகை, உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், மார்பக மற்றும் கர்ப்பப்பை வாய் புற்றுநோய், காசநோய் மற்றும் அரிவாள் வடிவ நோய் உள்ளிட்ட பெண்களின் உடல்நலப் பிரச்சினைகளுக்கு SNSPA விரிவான பரிசோதனைகளை வழங்குகிறது.
- பேறுகாலத் தாய்மார்கள் உயிரிழப்பு மற்றும் பச்சிளம் குழந்தை உயிரிழப்பு விகிதங்களைக் குறைப்பதற்கான நோய்த்தடுப்பு மற்றும் ஊட்டச்சத்துத் திட்டங்களை இந்த முன்னெடுப்பு ஆதரிக்கிறது.
- வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனை உறுதி செய்வதற்காக இந்தப் பிரச்சாரத்தின் நிகழ்நேர கண்காணிப்பு SASHAKT வலை தளம் மூலம் மேற்கொள்ளப்

படுகிறது.

- காசநோய் ஒழிப்பு மற்றும் சுகாதாரத் திட்டத்தை செயல்படுத்துவதில் உதவும் நிக்சய் மித்ராஸ் மூலம் சமூகப் பங்கேற்பு ஊக்குவிக்கப்படுகிறது.
- SNSPA, மகப்பேறுக்கு முந்தைய பராமரிப்பு பரிசோதனைகள், ஆலோசனை வழங்குதல் மற்றும் தாய் மற்றும் குழந்தைப் பாதுகாப்பு (MCP) அட்டைகளை விநியோகிப்பதன் மூலம் குடும்ப நல்வாழ்வை ஊக்குவிக்கிறது.




## சாதிக் குற்ற வழக்கில் முன்னெச்சரிக்கை தடுப்புப் பிணை

- சாதிக் குற்றத்தில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட்ட முன்னெச்சரிக்கை தடுப்புப் பிணையை இந்திய உச்ச நீதிமன்றம் ரத்து செய்தது.
- இந்த வழக்கில் 1989 ஆம் ஆண்டு பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பட்டியலிடப் பட்ட பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுகள் அடங்கும்.
- தேர்தல் தகராறுடன் தொடர்புடைய தாக்குதல், சாதி அடிப்படையிலான துஷ்பிரயோகம், கொள்ளை, பாலியல் வன்கொடுமை மற்றும் அச்சுறுத்தல்கள் குறித்து முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.
- கூடுதல் அமர்வு நீதிமன்றம் மிகவும் மோசமான நோக்கம் மற்றும் சான்றுகளின் அடிப்படையில் முன்னெச்சரிக்கை தடுப்புப் பிணையை நிராகரித்தது.
- பின்னர், இந்த வழக்கானது அரசியல் ரீதியாக முன் வைக்கப்பட்டதாகவும் மிகைப் படுத்தப் பட்டதாகவும் கூறி உயர் நீதிமன்றம் முன்னெச்சரிக்கை தடுப்புப் பிணை வழங்கியது.
- இந்தச் சட்டத்தின் பிரிவு 18, முதல் நோக்கிலிடு வழக்கு தொடரப்படும் இடங்களில் முன்னெச்சரிக்கை தடுப்புப் பிணையைத் தடைசெய்கிறது என்று உச்ச நீதிமன்றம் கூறியது.
- முன்னெச்சரிக்கை தடுப்புப் பிணையை அனுமதிக்கும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 438 வது பிரிவின் பொருந்தக்கூடிய தன்மையை 18 வது பிரிவு விலக்குகிறது.

- பொது மக்களின் பார்வையில் நிகழும் தாக்குதல் மற்றும் சாதி அவமதிப்புகள் சட்டத்தின் குற்றங்களுக்கான வரையறையின் கீழ் வருகின்றன.
- பட்டியலிடப்பட்ட சாதியினர் அல்லது பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் உறுப்பினர்களுக்கு எதிராக வாக்களிப்பது தொடர்பான வற்புறுத்தல் அல்லது பழிவாங்கல் நடவடிக்கை ஆனது இந்தச் சட்டத்தின் குறிப்பிட்ட விதிகளுக்கு உட்படுகிறது.
- உச்ச நீதிமன்றம் ஆனது உயர் நீதிமன்றத்தின் பிணை உத்தரவை வெளிப்படையான தவறு மற்றும் அதிகார வரம்புக்கு உட்பட்ட சட்டவிரோதம் என்று கூறியது.
- இந்தச் சட்டத்தின் கீழ் எளிதில் பாதிக்கப்படக் கூடிய சமூகங்களைப் பாதுகாக்க முன்னெச்சரிக்கை தடுப்புப் பிணை மீதான தடையின் அரசியலமைப்பு செல்லுபடித் தன்மையை இந்த தீர்ப்பு மீண்டும் உறுதிப்படுத்தியது.




## பீமா சுகம் வலைதளம்

- இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (IRDAI) ஆனது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பீமா சுகம் வலை தளத்தினைத் தொடங்கியுள்ளது.
- பீமா சுகம் நுகர்வோர், காப்பீட்டாளர்கள், முகவர்கள் மற்றும் இடைத்தரகர்களுக்கான ஒற்றை நிலை டிஜிட்டல் காப்பீட்டுச் சந்தையாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இந்தத் தளமானது பயனர்கள் அனைத்து வகையான காப்பீட்டுக் கொள்கைகளுக்கான உரிமைக் கோரல்களை ஒப்பிடவும், வாங்கவும், புதுப்பிக்கவும் மற்றும் இறுதியில் தீர்வு காணவும் வழி வகுக்கும்.



# சர்வதேசச் செய்திகள்

## இந்தியா - ILO ஒப்பந்தம் 2025




- ❖ இந்தியா 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் சர்வதேச தொழிலாளர் அமைப்புடன் (ILO) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- ❖ உலகளாவிய வேலைவாய்ப்பை ஆதரிப்பதற்காக தொழில்களின் சர்வதேச குறிப்பு வகைப்பாட்டை உருவாக்குவதே இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நோக்கமாகும்.
- ❖ இந்த முன்னெடுப்பு மக்கள்தொகை மாற்றங்கள் மற்றும் டிஜிட்டல் மயமாக்கலால் ஏற்படும் உலகளாவிய திறன் பற்றாக்குறையை நிவர்த்தி செய்கிறது.
- ❖ 2023 ஆம் ஆண்டில் இந்தியாவின் தலைமைப் பதவியின் போது G20 தலைவர்கள் இந்தக் கட்டமைப்பை அங்கீகரித்தனர்.
- ❖ இந்த வகைப்பாடானது தரவு ஒப்பீட்டை மேம்படுத்தும் மற்றும் திறன்களின் பரஸ்பர அங்கீகாரத்தை ஊக்குவிக்கும்.
- ❖ இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் பசுமை, டிஜிட்டல் மற்றும் பராமரிப்புத் துறைகளில் ஒரு சாத்தியக்கூறு ஆய்வு மற்றும் சோதனைத் திட்டம் நடத்தப்படும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## பொதுப் பயன்பாட்டு AGI தளம்


- ❖ சென்டியன்ட் AI நிறுவனமானது, ஒரு பொதுப் பயன்பாட்டுச் செயற்கைப் பொது நுண்ணறிவு (AGI) தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இந்தத் தளம் 40க்கும் மேற்பட்ட சிறப்பு செயற்கை நுண்ணறிவு முகவர்கள், 50 தரவு மூலங்கள் மற்றும் 10+ AI மாதிரிகளை ஒரே வலையமைப்பில் ஒருங்கிணைத்து, நிகழ் நேர ஒத்துழைப்பு மற்றும் சிக்கலான பணிச் செயல்பாடுகள் செயல்படுத்தலைச் செயல்படுத்துகிறது.
- ❖ இந்தத் தளமானது Base, Binance Coin (BNB), Polygon, Arbitrum, Celo மற்றும் Near உள்ளிட்ட பல தொடர் சங்கிலித் தொழில்நுட்பம் முழுவதும் பயன்படுத்தப்படும் சூழல் அமைப்பு முகவர்களை ஆதரிக்கிறது.
- ❖ சென்டியன்ட் நிறுவனம் ஒரு டோக்கன் அடிப்படையிலான ஊக்க மாதிரியைப் பயன்படுத்துகிறது என்பதோடு இது வழக்கமான Pay-per-API மாதிரிகள் போல் இல்லாமல் மாறாக நிரல் உருவாக்க நிபுணர்களுக்கு உரிமைப் பங்குகள் மற்றும்

லாபத்தை வழங்குகிறது.

- இந்தப் புத்தொழில் நிறுவனம் ஆனது AGI தளத்தினை பொதுப் பயன்பாடு மூலமாகவும் எந்த ஒரு நிறுவனத்தின் கட்டுப்பாட்டிலிருந்தும் விடுபட்டதாகவும் மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## SPIN90 புரதம்





- ஐதராபாத்தில் உள்ள அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபையின் உயிரணு மற்றும் மூலக்கூறு உயிரியல் மையத்தின் (CCMB) அறிவியலாளர்கள், செல் இயக்கத்தில் SPIN90 புரதத்தின் முக்கியப் பங்கைக் கண்டறிந்தனர்.
- செல்கள் நகரவும் அதன் வடிவத்தை மாற்றவும் எவ்வாறு தங்கள் உள் அமைப்பை மாற்றியமைக்கின்றன என்பதை இந்த ஆய்வு விளக்குகிறது.
- வெள்ளை இரத்த அணுக்கள் போன்ற செல்கள் நோய்க் கிருமிகளைத் துரத்தவும் அழிக்கவும் விரைவான நீட்சிகளை உருவாக்க SPIN90 உதவுகிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## இந்திய இமயமலைப் பகுதியில் பேரிடர் ஆபத்து

- 2025 ஆம் ஆண்டு பருவமழை ஜம்மு மற்றும் காஷ்மீர், இமாச்சலப் பிரதேசம், பஞ்சாப் மற்றும் உத்தரக்காண்ட் ஆகியவற்றை கடுமையாக பாதித்தது.
- இந்திய இமயமலைப் பகுதி, செயலில் உள்ள கண்டத் தட்டுகள், நில அதிர்வு மற்றும் பிளவுப் படக் கூடிய புவியியல் அமைப்பு காரணமாக மிகவும் பாதிக்கப்படக் கூடியதாக உள்ளது.
- பருவநிலை மாறுபாடு ஆனது 2013 மற்றும் 2025 ஆகிய ஆண்டுகளில் உத்தரக்கண்டில் ஏற்பட்டது போல அடிக்கடி மேக வெடிப்புகள், திடீர் வெள்ளம் மற்றும் பனிச் சரிவுகளுக்கு வழி வகுத்தது.
- சாலைக் கட்டுமானம், நீர் மின் நிலையத் திட்டங்கள் மற்றும் நிலப் பயன்பாட்டு மாற்றம் போன்ற மனிதனால் தூண்டப்பட்ட காரணிகள் நிலச் சாய்வின் உறுதியற்றத் தன்மை மற்றும் அரிப்பை மோசமாக்குகின்றன.





# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## பாலினம் குறித்த அறிக்கை 2025

- ஐ.நா. பெண்கள் மற்றும் ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக விவகாரத் துறை (UN DESA) ஆகியவை 2025 ஆம் ஆண்டு பாலினம் குறித்த அறிக்கையை வெளியிட்டன.
- டிஜிட்டல் பிரிவுகளில் உள்ள பாலினம் சார்ந்த பிளவை நீக்குவது, 2050 ஆம் ஆண்டிற்குள் உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியை 1.5 டிரில்லியன் டாலர்கள் உயர்த்தும் மற்றும் 30 மில்லியன் பெண்களை வறுமையிலிருந்து விடுவிக்கும் என்பதை இது வலியுறுத்துகிறது.

- பெண்கள் தற்போது முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு பள்ளிப் படிப்பினை நிறைவு செய்வதற்கான வாய்ப்பு அதிகமாக உள்ளது என்பதோடு மேலும் 2000 முதல் 2023 ஆம் ஆண்டு வரை பேறுகாலத் தாய்மார்கள் உயிரிழப்பு கிட்டத்தட்ட 40% குறைந்துள்ளது.
- துணையினரின் வன்முறைக்கு எதிரான விரிவான நடவடிக்கைகளைக் கொண்ட நாடுகள் பலவீனமான பாதுகாப்புகளைக் கொண்ட நாடுகளை விட 2.5 மடங்கு குறைவாக விகிதங்களைக் கொண்டுள்ளன.
- பருவநிலைப் பேச்சுவார்த்தைகளில் பெண்களின் தலைமை சமீபத்திய ஆண்டுகளில் இரட்டிப்பாகியுள்ளது.
- கடந்த ஐந்து ஆண்டுகளில் 99 புதிய அல்லது சீர்திருத்தப்பட்ட சட்டங்கள் பெண்களுக்கு எதிரான பாகுபாட்டைக் குறைத்துள்ளன.
- 676 மில்லியன் பெண்கள் மற்றும் சிறுமிகள் கொடிய மோதல்கள் நடைபெறும் இடங்களுக்கு அருகில் வாழ்கின்றனர் என்ற நிலையில் இது 1990 ஆம் ஆண்டுகளுக்குப் பிறகு பதிவான மிக அதிக எண்ணிக்கையாகும் என்பதோடு மேலும் 2024 ஆம் ஆண்டில் ஆண்களை விட அதிகமாக சுமார் 64 மில்லியன் பெண்கள் உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொண்டனர்.
- துரிதப்படுத்தப்பட்ட நடவடிக்கை எதுவும் இல்லாமல், 2030 ஆம் ஆண்டிற்குள் பாலினச் சமத்துவம் குறித்த 5வது நிலையான மேம்பாட்டு இலக்கின் கீழ் உள்ள அனைத்து இலக்குகளையும் உலக நாடுகள் பூர்த்தி செய்ய இயலாமல் மாறும்.




# மாநிலச் செய்திகள்

## சக்தி திட்டம் 5.0

- உத்தரப் பிரதேசத்தில் பெண்களின் பாதுகாப்பு, கண்ணியம் மற்றும் அதிகாரமளிப்பை வலுப்படுத்துவதற்காக சக்தி திட்டம் 5.0 தொடங்கப்பட்டது.
- மாநிலம் முழுவதும் உள்ள 1,647 காவல் நிலையங்களிலும் சக்தித் திட்ட மையங்கள் தொடங்கப்பட்டன என்ற நிலையில் அவற்றுடன் SOP (சீர்தர செயல்பாட்டு நடைமுறை) கையேடுகள் மற்றும் விழிப்புணர்வுப் பொருட்களும் சேர்க்கப்பட்டன.
- உத்தரப் பிரதேச மாநில அரசானது 2017 ஆம் ஆண்டிற்கு முன்பு 10,000 ஆக இருந்த பெண் காவல்துறையினரின் எண்ணிக்கையை 2025 ஆம் ஆண்டுக்குள் 44,000க்கும்

அதிகமாக உயர்த்தியுள்ளது.

- 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை, பெண்களுக்கு எதிரான 9,513 குற்ற வழக்குகளில் 12,271 குற்றவாளிகள் தண்டிக்கப் பட்டனர் என்ற நிலையில் இதில் 12 மரணத் தண்டனைகள் மற்றும் 987 ஆயுள் தண்டனைகள் அடங்கும்.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## தாதாசாகேப் பால்கே விருது 2023

- மோகன்லாலுக்கு 2023 ஆம் ஆண்டிற்கான தாதாசாகேப் பால்கே விருது வழங்கப்பட உள்ளது.
- 71வது தேசிய திரைப்பட விருது வழங்கும் விழாவில் இந்த விருது வழங்கப்பட உள்ளது.
- தாதாசாகேப் பால்கே விருது இந்திய சினிமாவில் மிக உயர்ந்த கௌரவமாகும்.
- மோகன்லால் மலையாளத் திரைத்துறையில் நாற்பது ஆண்டுகளுக்கும் மேலான பங்களிப்பினைக் கொண்ட ஒரு முன்னணி நடிகர் ஆவார்.
- அவர் மலையாளம், தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் இந்தி மொழிகளில் சுமார் 400 படங்களில் நடித்துள்ளார்.
- அவர் தனது வாழ்க்கையில் ஐந்து தேசியத் திரைப்பட விருதுகளை வென்றுள்ளார்.
- மோகன்லாலுக்கு 2001 ஆம் ஆண்டில் இந்திய அரசு பத்மஸ்ரீ விருது வழங்கியது.
- 2019 ஆம் ஆண்டில் இந்திய அரசு அவருக்கு பத்ம பூஷண் விருது வழங்கியது.
- 2009 ஆம் ஆண்டில், அவர் இந்தியப் பிராந்திய இராணுவத்தில் கௌரவ லெப்டினன்ட் கர்னலாக நியமிக்கப்பட்டார்.




# முக்கிய தினங்கள்

## தேசிய மருந்தியல் கண்காணிப்பு வாரம் 2025




- இந்திய மருந்தியல் கண்காணிப்பு ஆணையம் (IPC) ஆனது 5வது தேசிய மருந்தியல் கண்காணிப்பு வாரத்தை (NPW) துவக்கியது.
- NPW ஆனது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 முதல் 23 ஆம் தேதி வரை அனுசரிக்கப் படுகிறது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்த வார அளவிலான அனுசரிப்பின் கருத்துரு, "Your Safety, just a Click Away: Report to PvPI" என்பதாகும்.
- இந்த ஒரு வார காலப் பிரச்சாரம் ஆனது சுகாதார வல்லுநர்கள், ஒழுங்கு முறை அமைப்புகள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சர்வதேச இருதய மற்றும் இரத்தக் குழாய் சிகிச்சை முறை தினம் 2025 - செப்டம்பர் 16

- முதல் குருதிக் குழாய்ச் சீரமைப்பு (கரோனரி ஆஞ்சியோபிளாஸ்டி) சிகிச்சை ஆனது 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் 16 ஆம் தேதியன்று டாக்டர் ஆண்ட்ரியாஸ் க்ரூன்ட்ஜிக் அவர்களால் செய்யப்பட்டது.
- இருதய நோய்கள் என்பது இதயம் மற்றும் இரத்த நாளங்களின் கோளாறுகளின் ஒரு குழுவாகும்.
- 2025 ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Innovations in Heart Care: Bridging Gaps for Cardiovascular Health Equity" என்பதாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★